புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 09, 2024 • புரட்சி 24 • முழக்கம் 17 • விலை ரூ.3.00

## தமிழ்நாட்டின் தனித்துவ அடையாளமான சுயமரியாதை திருமணங்களுக்கு ஆபத்தில்லை!

திருமணத்தின் போது அக்னி குண்டத்தை 7 முறை சுற்றி வராததால், தங்களின் திருமணம் செல்லாது என அறிவிக்கக்கோரி தம்பதி ஒன்று தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு சர்ச்சையைக் கிளப்பியது. இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம், இந்து திருமண முறைப்படி 7 முறை அக்னி குண்டத்தை சுற்றி வர வேண்டியது அவசியம், அப்படி சுற்றி வராத திருமணங்கள் பதிவு செய்யப்பட்டாலும் செல்லாது என்று தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பால் சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகுமா? ஆகாதா என்ற விவாதங்கள் வலுத்தன. இந்நிலையில் ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு இதுதொடர்பாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டில் விவரித்து கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பால், தமிழ்நாட்டில் மட்டுமே பின்பற்றப்படுகின்ற சுயமரியாதைத் திருமணங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று அவர் விளக்கியிருக்கிறார். அதில் இருந்து சுருக்கமானப் பகுதியைக் காணலாம்.

1952 பொதுத் தேர்தலுக்குப் பிறகு, புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் புரட்சியாளர் அம்பேத்கர் உருவாக்கிய இந்துக்களுக்கான திருமண வாரிசு மற்றும் தத்தெடுப்பு தொடர்பான சட்டத்தை நிறைவேற்றும் பணியையும் மேற்கொண்டது. இம்முறை, நான்கு சட்டங்களாக தயார் செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் புதிதாக இணைக்கப்பட்ட உறுப்பினர்கள் இந்து திருமணச் சட்டம் , 1955 உட்பட நான்கு சட்டங்களை நிறைவேற்றினர். சட்டத்தின் 7வது பிரிவின்படி, திருமணத்தின் இன்றியமையாத தேவை தம்பதிகள் அக்னி குண்டத்தைச் சுற்றி வரவேண்டும். இந்தத் தேவையின் விளைவாக



திருமணம் பின்னர் பதிவு செய்யப்பட்டாலும், சாஸ்திரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாததால், அது செல்லுபடியாகாததாகக் கருதப்படாது. அதைத் தொடர்ந்து, நீதிமன்றங்களில் வழக்குகள், சடங்குகள் இல்லாத பல திருமணங்கள் செல்லாது என்று கண்டறியப்பட்டன. இதைப் போக்க, தமிழ்நாடு மாற்று அணுகுமுறையை வகுத்தது.

1967-இல் காங்கிரசை தோற்கடித்து திமுக வெற்றி பெற்றபோது, முதல்வரான அறிஞர் அண்ணா, இந்து திருமணச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தார். புதிய பிரிவு 7A இன் கீழ், சுயமரியாதைத் திருமண முறைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் கொடுத்தார். தாலி கட்டினாலோ அல்லது மோதிரம் மாற்றிக் கொண்டாலோ அல்லது மாலை மாற்றிக் கொண்டாலோ போதுமானது. அந்தத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்பதே சுயமரியாதைத் திருமணம். மற்ற எந்த சடங்கு, சம்பிரதாயங்களையும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. இந்த சுயமரியாதைத் திருமண முறைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு 2001ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த சட்டத்திருத்தத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் சுயமரியாதைத் திருமணங்களின் எண்ணிக்கை பெருகியது. சில ஆர்வமுள்ள வழக்கறிஞர்கள் தங்கள் அலுவலகங்களில் இத்தகைய திருமணங்களை நடத்தத் தொடங்கினர். 2014 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்திற்கு வந்த புகாரில், வடசென்னையில் 50% திருமணங்கள் வழக்கறிஞர் அலுவலகங்களில் நடைபெறுவதாகக் குற்றம்சாட்டபபட்டது. அந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், திருமணம் செய்துவைப்பது வழக்கறிஞர்களின் வேலை இல்லை என்று தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றத்தின் கருத்து தவறானது என தெளிவுபடுத்தியது உச்சநீதிமன்றம். சட்டப்பிரிவு 7ஏ-இன் வரம்பைக் குறைக்க நீதிமன்றம் எந்த நிபந்தனையும் விதிக்க முடியாது, அப்படிச் செய்தால் அது அரசியலமைப்பின் 21-வது பிரிவை மீறுவதாகவும் என்று கூறியது. அதேபோல, சுதந்திரமான தேர்வைப் பயன்படுத்துவதற்கான தனிநபர்களின் உரிமை வாழ்வுரிமையின் உள்ளார்ந்த பகுதியாகும் என்று 2023-லும் உச்சநீதிமன்றம் கூறியது. மேற்குறிப்பிட்ட தீர்ப்புகளின் அடிப்படையில், தமிழ்நாடு தனித்து நிற்கிறது. எனவே உச்சநீதிமன்றம் தற்போது பிறப்பித்துள்ள உத்தரவால் சுயமரியாதைத் திருமணங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. 7 முறை அக்னி குண்டத்தைச் சுற்றிவர வேண்டிய அவசியமும் இல்லை.

## ‘தகுதி’ ‘திறமையை’ தோலுரிக்கும் ராகுல் காந்தி
## பெரியாரின் சிந்தனைகளுக்கு கிடைத்த வெற்றி

உயர்ஜாதி ஏழைகளுக்கான 10% இடஒதுக்கீட்டை பெற்று விட்ட பிறகும், பிற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியல் சமூகத்தினரை நோக்கி ‘கோட்டா ஜாதி’ என்று இழிவுபடுத்தும் போக்கை இன்னும் பார்ப்பனர்கள் விட்டுவிடவில்லை. இச்சூழலில் ‘மெரிட்’ குறித்து ராகுல் காந்தி அளித்திருக்கும் மிக எளிமையான விளக்கம் சமூகநீதியின்பால் அவர் கொண்டிருக்கும் அக்கறையை வெளிகாட்டுவதாய் உள்ளது. இடஒதுக்கீடு ஏன் அவசியம்? ஜாதி வாரி கணக்கெடுப்பு ஏன் அவசியம்? கல்வி உரிமைகள் - மாநில உரிமைகள் ஏன் பாதுகாக்கப்பட வேண்டும்? என்றெல்லாம் தமிழ்நாட்டின் பார்வையில், குறிப்பாகத் திராவிட இயக்கத்தின் பார்வையில் மிகத் தெளிவாக, ஆழமான கருத்துக்களை கடந்த காலங்களில் தெரிவித்திருக்கும் ராகுல் காந்தி, இப்போது ‘மெரிட்’ குறித்து அளித்திருக்கும் விளக்கம் அவர் மீதான நம்பிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்வதாக உள்ளது.

இதுதொடர்பாக ராகுல் காந்தி சமீபத்தில் பேசியிருக்கும் காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. அதில் அவரிடம் எழுப்பப்பட்ட கேள்வியும், அதற்கு அளித்த பதிலும்...

### கேள்வி: மெரிட் என்றால் என்ன ?

**பதில் :** உண்மையில் நடந்த கதை ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன். இந்தியாவில் IIT க்களை போன்ற அமெரிக்காவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத் தேர்வு SAT என்று அழைக்கப்படுகிறது. முதன்முதலாக



SAT தேர்வுகள் அமல்படுத்தப்பட்ட போது ஒரு விநோதம் நடந்தது. வெள்ளை அமெரிக்க மாணவர்கள் மட்டுமே அதில் முதன்மை மதிப்பெண் பெற்றார்கள். கருப்பின அமெரிக்க மாணவர்களால் நல்ல மதிப்பெண்கள் பெற முடியவில்லை. ஸ்பானிஷ் மொழி பேசும் லத்தீன் அமெரிக்க மாணவர்களாலும் அதிக மதிப்பெண் பெற முடியவில்லை.

இதுபற்றி கல்வியாளர்கள் சொன்னார்கள். ஆப்பிரிக்க கருப்பின மாணவர்களுக்கும் லத்தீன் அமெரிக்க மாணவர்களுக்கும் மெரிட் சாமர்த்தியம் இல்லை என்று சொன்னார்கள். இவர்களால் கடினமான பாடங்களைப் புரிந்து கொள்ளவே முடியாது என்று சொன்னார்கள். இந்த வகை கருத்தாக்கம் பல ஆண்டுகளாக இருந்தது. அதன் பின் ஓர் அறிவார்ந்த பேராசிரியர் திடீரென வந்தார். நான் ஒரு சோதனை செய்து பார்க்கிறேன் என்றார் அவர். ஆப்பிரிக்க கருப்பின மாணவர்கள் தேர்வு எழுதிய ஒரு கேள்வித்தாளை அவர் கேட்டு வாங்கினார். வெள்ளை அமெரிக்க மாணவர்கள் அதற்கு விடை எழுதுமாறு பணித்தார்.

என்ன நடந்தது தெரியுமா? வெள்ளை அமெரிக்க மாணவர்கள் அனைவரும் தோல்வியடைந்து விட்டனர். இதிலிருந்து தெரிவது என்ன? தேர்வு முறையை யார் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்களோ அவர்கள்தான் மெரிட்டை முடிவு செய்கிறார்கள். உதாரணமாக உங்கள் அப்பா ஒரு விவசாயி. என்னுடைய அப்பா ஓர் அதிகாரி என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் வினாத்தாளை உருவாக்கினால் நான் தோல்வியடைந்து விடுவேன். நான் வினாத்தாளை உருவாக்கினால் நீங்கள் நிச்சயம் தோல்வியடைந்து விடுவீர்கள். யார் மெரிட் உள்ளவர் என்பது இங்கே அதிகாரத்தில் உள்ளவர்களால் தீர்மானிக்கப்பட்டு வந்துள்ளது.

நமது நாட்டில் IIT தேர்வுக்கான வினாத்தாளை வடிவமைப்பவர்கள் அனைவரும் உயர்த்தப்பட்ட ஜாதியினர். அதனால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் தோல்வியடைகின்றனர். இப்போது ஒரு மாற்றம் செய்து பார்ப்போம். IIT தேர்வுக்கான வினாத்தாளை தாழ்த்தப்பட்ட ஜாதியினர் வடிவமைக்கட்டும். ஆம். இதை நாம் நிச்சயமாக முயற்சி செய்து பார்ப்போம். சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் என்று நான் பேசுவதே இந்த சமூக நீதிக்காகத்தான்.

### தலையங்கம்

# ஆலயத் தீண்டாமையை அகற்றுவோம்!

சேலம் மாவட்டம் காடையம்பட்டிக்கு அருகில் இருக்கிறது தீவட்டிப்பட்டி கிராமம். இப்பகுதியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்களும், அருகே இருக்கிற நாச்சினம்பட்டியில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களும் வசிக்கின்றன. இரு கிராமங்களுக்கும் நடுவில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருக்கும் மாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோயில் திருவிழாவை ஒட்டி, மே 1-ஆம் தேதி இரவு உள்ளே சென்று வழிபடச் சென்ற பட்டியல் சமூகத்தினரை ஆதிக்க ஜாதியினர் தடுத்திருக்கிறார்கள்.

இதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து மே 2-ஆம் தேதி வருவாய்த்துறையினர் மற்றும் அறநிலையத்துறையினர் இருதரப்பினரையும் அழைத்து அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். பேச்சுவார்த்தையில் எந்த சமரசமும் எட்டப்படாத நிலையில், சாலையில் நின்று கொண்டிருந்த பட்டியல் சமூகத்தினர் மீது சிலர் கற்களை வீசித் தாக்கியுள்ளனர். இதனால் ஏற்பட்ட கலவரத்தில் அருகில் இருந்த கடைகளுக்கு தீ வைக்கப்பட்டிருக்கிறது. இருதரப்பிலும் காவல்துறை சிலரைக் கைது செய்திருக்கிறது.

தீவட்டிப்பட்டி பகுதியில் இருக்கும் இந்த மாரியம்மன் கோயிலானது 1972-ஆம் ஆண்டில் இருந்தே அறநிலையத்துறை கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருக்கும் கோயில்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொதுவானவை. கருவறைத் தீண்டாமையை ஒழித்து அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகிவிட்ட இந்த காலகட்டத்தில், கோயிலுக்குள் குறிப்பிட்ட ஜாதியினர் நுழையக்கூடாது என்றெல்லாம் கட்டளையிட எவருக்கும் உரிமையில்லை. மாரியம்மன், அய்யனார், கருப்பசாமி, முனியசாமி என சிறுதெய்வ கோயில்களில் மட்டும் இன்னமும் எல்லா சமூகத்தினரும் வழிபட அனுமதி மறுக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.

“பட்டியல் சமூகத்தினர் கோயிலுக்கு வெளியே நின்று வழிபடுவதுதான் பழக்கவழக்கம். இப்போது என்ன திடீரென கோயிலுக்குள் நுழைய வேண்டும் என்கிறார்கள்?” என்று ஆதிக்க ஜாதியினர் கேட்கிறார்கள். சூத்திரர்கள் கல்வி கற்கக்கூடாது என்பதுகூட பழக்க வழக்கமாகத்தான் இருந்தது. பார்ப்பனர்களுக்கு அடிமை வேலை செய்வது மட்டுமே சூத்திரர்களின் பழக்க வழக்கமாக இருந்தது. இப்போதும் அதையே செய்ய இடைநிலை ஜாதிகள் தயாராக இருக்கின்றனவா? பழக்க வழக்கம் எதுவுமே நிரந்தரமானது அல்ல, காலப்போக்கில் எல்லாமே மாறிக்கொண்டேதான் இருக்கும்.

கல்வி, வேலைவாய்ப்பில் பெரும் முன்னேற்றம் கண்டு நவீனமாகிக் கொண்டிருக்கும் வேளையில், ஜாதியப் படிநிலைகள் கரைந்து எல்லோரும் சமம் என்ற உணர்வு மேலோங்கவே செய்யும். கல்வியும், வேலைவாய்ப்பும் பெற்ற பின்பு, ஜாதியின் பெயரால் இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் குரல் கொடுக்கவே செய்வார்கள். பழக்க வழக்கத்திற்கு எதிரானது என்று அந்தக் குரலை நசுக்கிவிட முடியாது. படித்த இன்றைய இளம் தலைமுறை உரிமை மறுப்புக்கு எதிராக இத்தகையக் குரல்களை எழுப்புவதே திராவிட இயக்கத்தின் சமத்துவச் சிந்தனைகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி. கடந்த ஆண்டு மேல்பாதியிலும் அதுதான் நடந்தது. இப்போது தீவட்டிப்பட்டியிலும் அதுதான் நடக்கிறது.

கருவறைத் தீண்டாமையை ஒழித்திருக்கிற இந்த ஆட்சியில், போராடினால் கோயில் நுழைவு உரிமையைப் பெற்றுவிடலாம் என்கிற பட்டியல் சமூகத்தினரின் நம்பிக்கையும் இத்தகையப் போராட்டங்கள் சமீப காலங்களில் அதிகம் நடப்பதற்கும் முக்கியக் காரணமாக இருக்கிறது. எனவே நாட்டார் கோயில்களின் நடைமுறைகளில் மிக அப்பட்டமாக வெளிப்படும் இத்தகைய ஜாதிய அத்துமீறல்கள் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆரியப் பண்பாட்டுக்கு எதிரானது நாட்டார் வழிபாடு என்கிற தமிழ்தேசியர்களின் பொய், புரட்டுகளுக்கு மறுப்பாக, நாட்டார் வழிபாடு என்பது இந்துத்துவத்தின் உட்கூறான ஜாதியத்தை உள்ளடக்கியதே என்பதற்கான மற்றுமொரு ஆதாரமாகவே தீவட்டிப்பட்டி சம்பவம் அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு முழுக்க அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற அனைத்து நாட்டார் கோயில்களிலும் அனைத்து சமூகத்தினருக்கும் வழிபாட்டு உரிமையை உறுதிசெய்ய உறுதியான நடவடிக்கை எடுப்பது ஒன்றே இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும். இதற்கு மாறாக பட்டியல் சமூகத்தினரை தொடர்ந்து புறக்கணிப்பது தொடருமானால் போராட்டங்களும் தொடரவே செய்யும். தீவட்டிப்பட்டி சம்பவத்திற்கு தொடர்பே இல்லாத பட்டியல் சமூகத்தினர் சிலர் மீதும் கைது நடவடிக்கை பாய்ந்திருக்கிறது என நாச்சினம்பட்டி பகுதி மக்கள் குற்றம்சாட்டியிருக்கின்றனர். பட்டியல் சமூகத்தினர் குடியிருக்கும் பகுதிக்குள் நுழைந்து காவல்துறையினர் சிலரைக் கடுமையாகத் தாக்கியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அப்பாவி மக்களை விடுவிப்பதுடன், வழிபாட்டு உரிமையை நிலைநிறுத்தவும் தமிழ்நாடு அரசு தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# உடைந்து தொங்கும் மோடி பிம்பம்

*10 ஆண்டுகால மோடி ஆட்சியில் உலக நாடுகள் கண்டு அஞ்சுகிற அளவுக்கு மிகப்பெரிய வல்லாதிக்க சக்தியாக இந்தியாவை வளர்த்துவிட்டார் என பார்ப்பனக் கூட்டம் தங்களுக்கு தாங்களே குதூகலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் உலக நாடுகளின் புள்ளி விவரங்கள் அனைத்தும் மோடி ஆட்சி இந்தியாவின் இருண்ட காலம் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டிக்கொண்டிருக்கின்றன.*

- உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்த ஆண்டு இந்தியா 159வது இடத்துக்கு பின்தங்கிவிட்டதாக உலகளாவிய ஊடக கண்காணிப்பு நிருபர்கள் ஆய்வறிக்கை கூறுகிறது. தரவரிசையில் உள்ள மொத்த நாடுகளின் எண்ணிக்கையே 176-தான். இந்த பட்டியலில் 2022ஆம் ஆண்டில் 150-வது இடத்தில் இந்தியா இருந்தது. ஆண்டுக்கு ஆண்டு நிலைமை மோசமாகிக் கொண்டே செல்கிறது.
- 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச வறுமைக் குறியீட்டுப் பட்டியலில் இந்தியா 111-வது இடத்திற்கு பின் தங்கியுள்ளது. மொத்த நாடுகளின் எண்ணிக்கை 125. இந்த பட்டியலிலும் முந்தைய ஆண்டில் இந்தியா 107-வது இடத்தில் இருந்தது.
- 2022ஆம் ஆண்டு கணக்குப்படி இளைஞர்களுக்கான வேலையின்மை விகிதம் இந்தியாவில் 23.22 விழுக்காடாக உள்ளது. ஆனால் அண்டை நாடுகளான பாகிஸ்தானில் 11.3 விழுக்காடாகவும், வங்கதேசத்தில் 12.3 விழுக்காடாகவும், சீனாவில் 13.2 விழுக்காடாகவும், பூடானில் 14.4 விழுக்காடாகவும் மட்டுமே இருப்பதாகச் சொல்கிறது உலக வங்கி.
- இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை 2022-இன் படி இந்தியாவில் வேலையில்லாமல் இருப்பவர்களில் 82 விழுக்காட்டினர் இளைஞர்கள்.
- உலகளாவிய அடிமை அட்டவணையிலும் ஜி20 நாடுகளில் உச்சத்தில் இருக்கும் நாடு இந்தியா.

*இதுபோக, மோடி ஆட்சியின் மனித உரிமை மீறல்கள், இந்துத்துவவாதிகளால் நிகழ்த்தப்படும் வன்முறைகள் குறித்தும் சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. எதிர்ப்புகளும் எழத் தொடங்கியிருக்கின்றன. அரவிந்த் கெஜ்ரிவால் மீதான அமலாக்கத்துறை நடவடிக்கைக்கு அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளிடம் இருந்து கண்டனங்கள் எழுந்தன. மணிப்பூரில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்தும், குருகிராமில் வெடித்த மதக்கலவரம் குறித்தும் அமெரிக்கா கவலை தெரிவித்தது. சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் இந்தியாவில் ‘மத சுதந்திரம் குறைந்து வருகிறது’ என்று வெளிப்படையாகக் குற்றம்சாட்டியதுடன், மத சுதந்திரம் பறிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகி சிறையில் இருக்கும் 37 பேரை விடுவிக்க மோடி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது.*

*தேர்தல் சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதற்கும் உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன. குஜராத் கலவரம் தொடர்பான பிபிசியின் ஆவணப்படத்தைத் தொடர்ந்து, அந்நிறுவனத்தின் அலுவலகங்களில் நடத்தப்பட்ட வருமான வரிச்சோதனையும் உலக நாடுகளால் கண்டனத்துக்கு உள்ளானது. ஆனால் இந்திய பகுதிகளை இணைத்து வரைபடம் வெளியிடும் சீனாவுக்கு எதிராக துணிச்சலாக கருத்துச் சொல்லவே அஞ்சுகிறது ஒன்றிய பாஜக அரசு. இத்தகைய போக்குகளால் மோடியின் பிம்பம் உலக நாடுகள் முன் உடைந்து நொறுங்கியிருக்கிறது. மீண்டும் இந்தியாவில் மோடியின் ஆட்சி அமையுமானால் அது மோசமான சர்வாதிகாரத்திற்கே இட்டுச் செல்லும் என்றும் சர்வதேச ஏடுகள் எச்சரித்துள்ளன.*

## +2 தேர்ச்சி பெற்ற திருநங்கைக்கு பாராட்டு

*சென்னை நடுக்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர் திருநங்கை சகோதரி நிவேதா. இவர் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 283/600 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்திருக்கிறார்.*



*சகோதரி நிவேதா அவர்களை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி தலைமையில் நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தனர். உடன் தோழர்கள் அருண்குமார், இராஜேசு, குமார், எழில், அன்னூர் விஷ்ணு.*


**தோழர் விடுதலை இராசேந்திரன் முகவரி**

ஆசிரியர், புரட்சிப் பெரியார் முழக்கம்

15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர்.

பெருங்குடி, சென்னை - 600096

தொலைப்பேசி எண் : 76049 89608, 94441 15133

# வாலிபர்களே தயாராய் இருங்கள்!

**பெரியார் தன்னைப் பற்றி சுய விமர்சனத்தோடு எழுதிய கட்டுரை. 02.05.2024 இதழின் தொடர்ச்சி...**

இந்த எண்ணத்தின் மீதே சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தேன். இந்த எண்ணம் கைகூடினால் மனித சமூகத்தில் உள்ள போராட்டங்கள் மறைந்து விடும். தனிப்பட்ட மனிதர்களுக்குள்ள குறைகள் நீங்கிவிடும்; தனக்கு என்கின்ற பற்றும் ஒழிந்துவிடும். உற்சாகத்துக்காக வேண்டுமானால் போராட்டங்களும் குறைகளும் அதிருப்திகளும் கவலைகளும் இருக்கலாம். அதாவது பண்டிகைக்காக ஓய்வெடுத்துக்கொண்ட மக்கள் பலர் கூடி சதுரங்கமோ, சீட்டாட்டமோ விளையாடும்போது யோசனைகள், கவலைகள், அதிருப்திகள் காணப்படுவதுபோல் இயற்கையின் ஆதிக்கத்தால் நமது வாழ்வுக்கு அவசியமில்லாததும் பாதிக்காததுமான யோசனை, கவலைகள் முதலியன காணப்படலாம். இவை எந்த மனிதனுக்கும் மனிதனல்லாத மற்ற எந்த ஜீவனுக்கும் உயிருள்ளவரை இருந்து தான் தீரும்."சரீரமில்லாத ஆத்மாவுக்கும் கண்ணுக்குத் தெரியாத சூட்சம சரீரத்திற்கும்" கூட "மோட்சமும்" "முக்தியும்" கற்பித்திருப்பதில் ஜீவனுக்கு வேலை யில்லாமலும் அநுபவமில்லாமலும் மோட்சம் - முக்தி கற்பிக்க முடியவில்லை. ஆதலால் ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டி இருந்து தீர வேண்டியதை உத்தேசித்து இந்த வேலையை நான் மேற்கொண்டேன்.

### நிஷ்காமிய கர்மம் யாது?


இதைத்தான் நிஷ்காமிய கர்மம் என்று சொல்லலாம். மற்றபடி காமிய கர்மத்துக்குப் பலன் இல்லையென்றும் சொல்லலாம். நிஷ்காமிய கர்மத்துக்குத்தான் பலன் உண்டு என்றும் சொல்லப் படுவது முன்னுக்குப் பின் முரணான கருத்தேயாகும். எப்படியெனில் நிஷ்காமிய கர்மமென்பதை அதாவது பயனை எதிர் பார்க்காத காரியத்தை ஒரு மனிதன் ஏன் செய்ய வேண்டும்? நிஷ்காமியமாய்ச் செய்தால்தான் பலன் உண்டு என்றதாலேயே "ஒரு பலன் ஏற்பட வேண்டும்" என்பதற்காக வேண்டி செய்வது என்பது அருத்தமாகிறது அல்லவா? ஒரு மனிதன் ஒரு பலனை எதிர்பார்த்து காரியம் செய்கிறது என்பதில் எப்படிப் பட்ட காரியமானாலும் அதன் கவலை அவனைப் பிடித்துத்தான் தீரும். ஆனால் உண்மையிலேயே நாம் ஜீவனுள்ள வரையில் ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டுமே என்பதற்காக அதுவும் அந்த வேலையைத் தெரிந்தெடுக்க நமக்குச் சரியாகவோ, தப்பாகவோ உரிமையிருக்கிறது என்பதாகவே, இந்த வேலை சுயமரியாதை இயக்க வேலை செய்து வருகிறேன். ஆனால் இந்த வேலை நமக்கு எப்போதாவது ஏமாற்றத்தைக் கொடுத்து சலிப்பாக வேலை செய்யச் செய்யவில்லை; உற்சாகத்தையே ஊட்டி வருகிறது.

### சுயமரியாதைத் தத்துவம்

சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் உலகம் ஒப்புக் கொண்டதேயாகும். என்னவென்றால் காரணகாரிய தத்துவ உணர்ச்சியையும் காரண காரிய விசாரணையையும் உலகம் ஏற்றுக்கொண்டுவிட்டது. மனித வாழ்வின் ஒவ்வொரு எண்ணத்திற்கும் தோற்றத் திற்கும் காரண காரியத்தை மனித ஜீவன் தேடுகின்றது. இயற்கையையே ஆராயத் தலைப்பட்டாய் விட்டது. விபரம் தெரியாத வாழ்வை அடிமை வாழ்வு என்று கருதுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமே அதுதான். எந்தக் காரியமானாலும் காரண காரியமறிந்து செய்; சரியா, தப்பா என்பதை அந்த காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டு விடு; எந்த நிர்ப்பந்த சமயத்திலும் அதன் முடிவுக்கு மரியாதை கொடு என்கின்றது. அதுதான் சுயமரியாதை. மனிதன் சரியென்று கருதிய எண்ணங்களுக்கும் முடிவு களுக்கும் மரியாதை கொடுப்பதுதான் சுதந்திரமாகும். சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் அதிக தூரமில்லை.

### சுயமரியாதையே சுதந்திரம்

இன்றைய சுதந்திரவாதிகள் சுதந்திரத்திற்காகச் சுயமரியாதையை அலட்சியம் செய்கிறார்கள்.



## தந்தை பெரியார்

அதாவது அடிமை தேசத்தில் சுயமரியாதைக்கு இடம் ஏது என்கிறார்கள். இது உண்மையிலே மூடவாதம் என்று சொல்லுவோம். சுயமரியாதை அற்றவர்களுக்கு சுயமரியாதை இல்லாதவர்களுக்கு சுதந்திரமேது என்பதுதான் சரியான வார்த்தையாகும்.

சுயமரியாதை இயக்கத்திற்குத்தான் சுதந்திர உணர்ச்சி தோன்றும் சுதந்திரம் தேவைப்படும்; சுதந்திரத்திற்குச் சுயமரியாதை தேவைப்படாது. சுயமரியாதைக்காரனின் சுதந்திரம் எல்லாவற்றிலும் சுதந்திரம் இருக்கத் தக்கதாய் இருக்குமென்றும் சுதந்திரக்காரனின் சுதந்திரமோ அவனுக்கே புரியாது; புரிந்தாலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பொருத்ததாக மாத்திரம் இருக்கும்.

உதாரணமாக இன்று அரசியல் சுதந்திரத்தை எடுத்துக் கொள்ளுவோம். இன்று அரசியல் உலகில் இருவர் பெயர் அடிபடுகின்றது. ஒன்று தோழர் காந்தியார் பெயர், மற்றொன்று தோழர் ஜவஹர்லால் பெயர். முந்தியவர் இந்தியாவில் உலக அனுபவமுள்ள சோம்பல் கூட்டத்தார், மத உணர்ச்சியாளர் (மூட

> **"மனித வாழ்வின் ஒவ்வொரு எண்ணத்திற்கும் தோற்றத்திற்கும் காரண காரியத்தை மனித ஜீவன் தேடுகின்றது. இயற்கையையே ஆராயத் தலைப்பட்டாய் விட்டது. விபரம் தெரியாத வாழ்வை அடிமை வாழ்வு என்று கருதுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமே அதுதான்."**

நம்பிக்கைகாரர்கள்) பழமை விரும்பிகள் ஆகியவர்களது உலகில் மதிக்கப்படுகிறவர். அவரது சுதந்திரம் என்பதெல்லாம் பழமையை அனுபவிக்கச் சுதந்திரம் வேண்டுமென்பதே. பிந்தியவர் உலக அனுபவமற்ற உற்சாகக்கார புதுமை விரும்பிகள் உலகத்தில் மதிக்கப்படுகிறவர் என்பதோடு குறிப்பற்று ஏதாவதொரு மாறுதல் வேண்டுமென்பவர். இந்த இரண்டு பேருக்கும் தெளிவான ஞானம் கிடையாது என்றே சொல்லலாம். ஏனெனில் சுதந்திரத்தின் யோக்கியதையே - சுதந்திரம் விரும்புகின்றவர்களின் தன்மையே அவ்வளவுதான். எப்படியெனில் இருவர் கோரும் சுதந்திரம் இன்று உலகில் எந்தப் பாகத்தில் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அங்கெல்லாம் ஏறக்குறைய முழு மக்களும் சுயமரியாதை இல்லாமல் இருப்பதைக் காணலாம்.

காந்தியார் இந்து மதம் புனருத்தாரணம் ஆவதும் பழைய முறைகள் உயிர்ப்பிக்கப்படுவதும் சுதந்திரம் என்கிறார். ஜவஹர்லால் பண்டிதர் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடுவது சுதந்திரம் என்கிறார். இவர்கள் இருவரும் கோரும் சுதந்திரங்களில் எது வந்ததானாலும் அல்லது இரண்டும் வந்து விட்டாலும் மனித சமூக வாழ்க்கையில் உள்ள துன்பங்களில் எது ஒழிக்கப்பட்டுவிடும் என்று ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரம் சுயமரியாதை அளிக்காது என்பது விளங்கும். எவ்வளவு சுதந்திரம் ஏற்பட்டாலும் சுயமரியாதைக்குத் தேவை இருந்து கொண்டுதான் இருக்கும்.

முழு சுயராஜ்யமுள்ள பிரிட்டிஷ் தேசத்தில் குடிகளுக்கு ஏன்? ராஜாவுக்கே தன் இஷ்டப்படி கல்யாணம் செய்துகொள்ள சுதந்திரம் இல்லாமல் ராஜ்யத்தை துறக்க வேண்டியதாகிவிட்டது என்றால் - அதுவும் ஜனப்பிரதிநிதிகளால் - அதுவும் பொது ஜனங்களுடைய விருப்பம், ஆமோதிப்பு என்பவைகளின் பேரால் என்றால் ஜவஹர்லால் சுயராஜ்யத்தில் காந்தியார் சுதந்திரத்தில் மனிதனுக்கு கடுகளவாவது சுயமரியாதை இருக்க இடமுண்டா என்று கேட்கின்றோம்.

### சுயமரியாதையின் பெருமை

அப்படிக்கில்லாமல் சுயமரியாதை பெற்ற (சுயமரியாதைக்குப் பிறந்த) சுதந்திரமாய் இருந்தால் "காதலுக்கு" பிரிட்டிஷ் அரசுக்கு ஏற்பட்டது போல் விலங்கு இருக்குமா? என்று கேட்கிறேன். சுயமரியாதை என்பது என்போன்ற சாதாரண மனிதனால் கையாளப் பட்டதனால் அதன் பெருமை விளங்காமல் போய் விட்டது என்று சொல்லலாமே தவிர அதற்கு நிகர் உலகில் மனிதனுக்கு உயிரைத் தவிர வேறு ஒன்றுமே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தப் பத்து வருஷகாலமாய் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வெகு சாதாரண முறையில் எவ்வளவோ எதிர்ப்புக் கிடையில் நேரப் போக்குப் பிரசாரமாக நடந்து வந்திருந்தபோதிலும் அதற்கு எத்தனையோ இடையூறுகள் பல கூட்டங்களில் இருந்தது - ஏன்? சுயமரியாதைக் கூட்டத்தில் இருந்தவர் களுக்குள் இருந்து கூட - ஏற்பட்டு இருந்தாலும் ஒரு குடம் பாலுக்கு ஒரு சொட்டு விஷம் என்பதுபோல் தமிழ்நாடு, மலையாள நாடு, ஆந்திர நாடு ஆகியவைகளை சமுதாய இயலில் ஒரு கலக்குக்கலக்கி விட்டிருக்கிறது. மத இயலிலும் மகா பண்டிதர்கள் ஞானிகள், ஆச்சாரியார்கள் என்பவர்களையெல்லாம் மாறிக்கொள்ளச் செய்திருக்கிறது. தோழர் காந்தி யாரையே பல கரணங்கள் போடச் செய்து விட்டது.

பெண்கள் உலகில் உண்மையான சுதந்திர வேட்கையைக் கிளப்பி விட்டு விட்டது. கீழ் ஜாதி மேல் ஜாதி யென்பவைகள் ஓடுவதற்கு ஓட்டத்தில் ஒன்றுக் கொன்று பந்தயம் போடுகின்றன. கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் பைபிளுக்கும் குர் ஆனுக்கும் புதிய வியாக்கியானங்கள் செய்யத் தலைப்பட்டு விட்டனர். தோழர் காந்தியாரோ அல்லது காங்கிரஸ் தொல்லையோ இல்லாமல் இருந்திருக்குமானால் இந்தியா பூராவையும் சுயமரியாதை இயக்கம் இன்னும் அதிகமாய் கலக்கி இருக்கும் என்பதோடு பார்ப்பனீயம் மாண்டு இருக்கும் என்றே சொல்லலாம்.

சுயமரியாதை இயக்கம் காந்தியாரை ஒரு அளவுக்கு மூலையில் உட்கார வைத்துவிட்டது என்றாலும் பார்ப்பனீயம் வேறு ஆட்களைப் பிடித்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முன்வந்து விட்டது. ஆனபோதிலும் காந்தீயம் பட்டு மாய்ந்து விட்டது என்பதில் சந்தேகமில்லை. அந்தப் பெருமை சுயமரியாதை இயக்கத்துக்கே உண்டு.

இனி இரண்டு மாதம் சென்றவுடனே ஜவஹர்லாலை சுயமரியாதை இயக்கம் மூலையில் உட்கார வைக்க முழு மூச்சில் முனையப் போகின்றது. சுயமரியாதை இயக்கம் இதுவரை செய்து வந்த பிரசாரத்துக்கு மேலாக, கேரள ஆந்திர கர்நாடக தேசம் மாத்திரமல்லாமல் இந்தியா முழுமைக்கும் பிரசாரம் செய்யப் போகின்றது. அது தனது பழைய வாலிபர்கள் பெரும் பாலோர் வாழ்க்கைப் பருவம் அடைந்து விட்டதால் புதிய வாலிபர்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறது. ஏராளமான வாலிபர்கள் இருக்கிறார்கள். எனக்கு ஒரு சமயம் "குறை" ஏற்பட்டாலும் சுயமரியாதைக்கு குறை ஏற்படாது.

**வாலிபர்களே தயாராய் இருங்கள்!**

(இக்கட்டுரை "நவமணி" ஆண்டு மலருக்காக பெரியார் எழுதியது) (18.7.1937)

நிறைவு

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## ஊழல்... ஊழல்... ஊழல்...

# பாஜக ஆட்சியில் எல்லாமே ஊழல்!


**ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகளில் பாரதிய ஜனதா கட்சி ரூ.60,000 கோடிக்கு மேல் செலவு செய்திருப்பதாக புள்ளிவிவரம் ஒன்று வெளியாகியிருக்கிறது. இதுதொடர்பாக "தி வயர்" இணைய ஊடகத்தில் மே 2-ஆம் தேதி பல்வேறு ஆதாரங்களுடன் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. அதன்படி பாரதிய ஜனதா கட்சி, மாவட்ட அலுவலங்கள் கட்டுவதற்காக 2,661 கோடி ரூபாயை செலவிட்டுள்ளது. மற்ற அலுவலகங்கள் கட்டுவதற்காக பாரதிய ஜனதா கட்சி செலவிட்ட தொகை 900 கோடி ரூபாய். மாநில தேர்தல்களுக்காக 16,492 கோடி ரூபாயும், நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக 54,000 கோடி ரூபாயில் இருந்து 87,750 கோடி ரூபாய் வரை பாஜக செலவிட்டிருப்பதாக அந்த கட்டுரை கூறுகிறது.**

ஒட்டுமொத்தத்தில் கடந்த 10 ஆண்டுகளில் பாஜக செலவிட்ட தொகை 74,053 கோடி ரூபாயில் இருந்து 107,803 கோடி ரூபாய் வரை இருக்கலாம். இது அந்த கட்சி அறிவித்திருக்கிற மொத்த வருவாயின் மதிப்பை விட 5 முதல் 7 மடங்கு வரை அதிகமாகும். 2014-15 நிதியாண்டு முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான காலகட்டத்தில் பாஜக அறிவித்திருக்கும் மொத்த வருவாயின் மதிப்பு 14,663 கோடி ரூபாய் மட்டுமே. அப்படியானால் ஒரு லட்சம் கோடி ரூபாய் வரை பாஜக எப்படி செலவு செய்தது என்ற கேள்வி எழுகிறது.


அதுமட்டுமல்லாமல், கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி பாஜகவில் இணைந்த சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 444. டெல்லியில் ஆம் ஆத்மி எம்.எல்.ஏ.க்கள் 7 பேருக்கு பாஜக தரப்பில் தலா 25 கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டதாக அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த ஆண்டு குற்றம்சாட்டினார். அதேபோல கர்நாடக காங்கிரஸ் எம்.எல்.ஏக்களுக்கு தலா 50 கோடி ரூபாய் பேரம் பேசப்படுவதாக அம்மாநில முதல்வர் சித்தராமையா குற்றம்சாட்டியிருந்தார். கோவாவிலும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுக்கு தலா 40 கோடி ரூபாய் முதல் 50 கோடி ரூபாய் வரை பேரம் பேசப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. மகாராஷ்டிராவில் சிவசேனா- தேசியவாத காங்கிரஸ்- காங்கிரஸ் கூட்டணி அரசை கவிழ்க்க 30-க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்களுக்கு தலா 50 கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இப்படி மாற்று கட்சியினரை பாஜகவுக்கு இழுக்க பேரம் பேசப்பட்ட தொகையின் மதிப்பே பல்லாயிரம் கோடி ரூபாயைத் தாண்டுகிறது. ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டம், துவாரகா எக்ஸ்பிரஸ் சாலைத் திட்டம், பி.எம்.கேர்ஸ், ரஃபேல் ஊழல் என பாஜக தொட்ட திட்டங்களில் எல்லாம் மெகா ஊழல் குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த ஊழல் பணம்தான் பாஜகவுக்கான அலுவலகங்களாகவும், மாற்று கட்சியினரை இழுக்க கொடுக்கப்பட்ட பேரத் தொகையாகவும் வழங்கப்பட்டவையா என்ற சந்தேகம் தேர்தல் களத்தில் வலுவான எழுந்திருக்கிறது.

ஆண்டு வாரியாக பாஜக வெளியிட்ட வருமான விவரம் (கோடிகளில்)



நிலம் வாங்க மற்றும் கட்டடங்கள் கட்ட பாஜக செய்த செலவு (கோடிகளில்)




# மசூதிகளை குறிவைக்கும் மலிவு அரசியல்!

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்த பிறகு, அங்கே ராமர் கோயிலை கட்டுவோம் என்று கூறி வடமாநிலங்களில் 30 ஆண்டுகளாக இந்துத்துவ அரசியலில் குளிர்காய்ந்தது பாஜக. ஆனால் இப்போது ராமர் கோயில் கட்டப்பட்டுவிட்டதால், இனி அயோத்தி அரசியல் எடுபடாது என்பதையும் உணரத் தொடங்கிவிட்டார்கள். புதிதுப் புதிதாக மசூதியைத் தேடத் தொடங்கிவிட்டார்கள் சங் பரிவார்கள். அவர்கள் இப்போது புதிதாகக் குறி வைத்திருக்கும் மசூதி ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கும் அஜ்மெர் மசூதி. கி.பி. 1236-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இம்மசூதி இந்தியாவில் மிகப் பழமையான மசூதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது.



இந்த மசூதியை தற்போது பார்வையிட்டுச் சென்றிருக்கும் சங் பரிவார் கும்பல், ஜெயின் கோயிலும், சமஸ்கிருதப் பள்ளியும் அவ்விடத்தில் இருந்ததாக சர்ச்சையைக் கிளப்பியுள்ளனர். அங்கே இந்து கடவுள் சிலைகளை கண்டதாகவும், மேலும் பல சிலைகள் அப்பகுதியில் எரிக்கப்பட்டிருக்கலாம் என்பதால், அப்பகுதியில் அகழாய்வு நடத்த வேண்டுமென்று பாஜகவைச் சேர்ந்த சாகர் என்பவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மசூதிக்குள் சென்று வந்த குழுவில் இவரும் இருந்திருக்கிறார். தற்போது இந்த மசூதியானது இந்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏற்கெனவே அயோத்தியைத் தொடர்ந்து காசி, மதுரா என ஒவ்வொரு மசூதியாகச் சென்று, உள்ளே சிலைகள் இருப்பதாக சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளனர் சங்கிகள்.

அதன் தொடர்ச்சியாகவே தற்போது ராஜஸ்தானிலும் ஒரு மசூதியை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ராஜஸ்தானில் 2 கட்ட வாக்குப்பதிவும் முடிந்துவிட்ட நிலையில், பாஜகவுக்கு மிகப்பெரிய பின்னடைவு ஏற்படலாம் என்று ஆங்கில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. எதிர்வரும் காலங்களில் அந்தப் பின்னடைவை சரிசெய்யும் முயற்சியாகவே பாஜகவின் வழக்கமான மசூதி அரசியல் உத்தி இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த இந்துக்களையும், சிறுபான்மை மக்களாகிய இசுலாமியர்களையும் மோதவிட்டு, அதில் பார்ப்பன நலனைப் பேணுகிற நயவஞ்சக அரசியலே இத்தகைய மசூதி இடிப்புகளின் பின்னணியில் ஒளிந்திருக்கிறது. அயோத்தியில் ராமர் கோயிலை கட்டியதால், பார்ப்பனர்களைத் தவிர வேறெந்த சமூகமாவது சிறு பயனைப் பெற்றிருக்கிறதா என்பதை பெரும்பான்மை இந்துக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

## மேட்டூர் ஆர்.எஸ். மாதையன் காலமானார்

சேலம் மாவட்டம் மேட்டூர் RS பகுதி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் சௌந்தர்ராஜனின் தந்தை மாதையன் (74) 07.05.2024 அன்று உடல் நலக்குறைவின் காரணமாக முடிவெய்தினார்.



மறைந்த தோழர் மாதையன் அவர்களின் இறுதி நிகழ்வு மேட்டூர் RS,தேங்கல்வாரை,NSK நகரில் உள்ள அவரது இல்லத்தில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது. இதில் சேலம் மாவட்டக் கழக பொறுப்பாளர்கள், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழகத்தின் வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு சந்தாதாராவீர்!

ஆண்டு சந்தா ரூ.300/- ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

தொடர்புக்கு : 8973341377

95, தலைமை நிலையம், நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம் அருகில் மயிலாப்பூர், சென்னை - 600004

## மேட்டூர் பசரியா மறைவு

மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் அம்ஜத் கானின் தாயார் பசரியா 27.04.2024 அன்று முடிவெய்தினார். மறைந்த அம்மையாரின் இறுதி நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழக சேலம் மாவட்ட பொறுப்பாளர்கள், தோழர்கள் திரளாகப் பங்கேற்று மரியாதை செலுத்தினார்கள்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted May 10, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran